TAMILTH Kancheepuram 1 Regional_04 214521 13793548

சென்னை மாநகராட்சியில் உள்ள 15 மண்டலங்களில் 3-வது மண்டலமான மாதவரத்தில் 22 முதல் 33 வரையிலான வார்டுகள் உள்ளன. இந்த மண்டலம், மாதவரம் சட்டப்பேரவை தொகுதியிலும், திருவள்ளூர் மக்களவை தொகுதியிலும் வருகிறது.

சென்னை மாநகராட்சி மண்டலங்களில் 4-வது மண்டலமாக உள்ள தண்டையார்பேட்டையில் 34 முதல் 48 வரையிலான வார்டுகள் இடம்பெற்றுள்ளன. இந்த மண்டலம், ஆர்.கே.நகர், திருவொற்றியூர், பெரம்பூர் சட்டப்பேரவை தொகுதிகளிலும், வட சென்னை மக்களவை தொகுதியிலும் வருகிறது.

கோரிக்கைகளை வலியுறுத்தி கருணாநிதி படத்துடன்

பேரணியாக சென்ற மருத்துவர்கள் கைது

■ சென்னை

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கருணாநிதி புகைப்படத்தை ஏந்தி பேரணியாகச் சென்ற மருத்துவர்களை போலீஸார் கைது செய்தனர்.

தமிழக அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய மாதம் ரூ.3 ஆயிரம் ஊக்கத்தொகை, முன்னாள் முதல்வர் கருணாநிதி ஆட்சியில் பிறப்பிக்கப்பட்ட அரசாணை 354-ஐ மறு ஆய்வு செய்தல், நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப புதிய பணியிடங்களை உருவாக்குதல் உள்ளிட்ட நீண்டகால கோரிக்கைகளை வலியுறுத்தி, அரசு மருத்துவர்கள் சங்கங்களின் கூட்டமைப்பினர் கடந்த சில நாட்களாக பல்வேறு கட்ட போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று சென்னை ஓமந்தூரார் அரசு பன்னோக்கு மருத்துவமனை வளாகத்திலிருந்து மருத்துவர்கள் பிரம்மாண்ட பேரணியைத் தொடங்கினர். முன்னாள் முதல்வர் கருணாநிதியின் புகைப்படத்தை ஏந்தியபடி அமைதியாகச் சென்ற மருத்துவர்கள், அண்ணா சாலையில் உள்ள அவரது உருவச்சிலை அருகே வந்தடைந்தனர். அப்போது அங்கு பாதுகாப்புப் பணியில் இருந்த போலீஸார் மருத்துவர்களைத் தடுத்து நிறுத்தி, வலுக்கட்டாயமாக வாகனங்களில் ஏற்றி கைது செய்தனர். இதனால் அந்தப் பகுதியில் சிறிது நேரம் பெரும் பரபரப்பு நிலவியது.

இதுகுறித்து கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர்கள் பாலகிருஷ்ணன் மற்றும் ராமலிங்கம் கூறுகையில், "அரசுடன் நடத்திய பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைகளின் போது எங்களுக்குப் பல வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன. ஆனால், அவை இன்றுவரை காகித அளவிலேயே உள்ளன. எங்களது நியாயமான உரிமைகளுக்காகவே நாங்கள் போராடுகிறோம். கருணாநிதி சிலை அருகே எங்களை போலீஸார் கைது செய்திருப்பது வருத்தமளிக்கிறது. கோரிக்கைகள் நிறைவேறும் வரை எங்களின் போராட்டம் ஓயாது" என்றனர்.

தங்கம் பவுனுக்கு ரூ.1,520 குறைந்தது

■ சென்னை

தங்கத்தின் விலை நேற்று பவுனுக்கு ரூ.1,520 குறைந்து, ரூ.1,16,800-க்கு விற்கப்பட்டது.

சர்வதேச பொருளாதாரச் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. அந்த வகையில், டிச.15-ல் ஒரு பவுன் தங்கம் ரூ.1,00,120-க்கு விற்கப்பட்டது. இதன்பிறகு, தங்கம் விலை படிப்படியாக உயர்ந்து வந்தது. அதிலும், ஜன.29-ம் தேதி வரலாறு காணாத விதமாக, பவுன் தங்கம் ரூ.1,34,400 ஆக அதிகரித்தது. இதன்பிறகு, தங்கம் விலை ஏற்ற இறக்கமாக இருக்கிறது. நேற்று முன்தினம் மாலை பவுனுக்கு ரூ.1,520 உயர்ந்து ரூ.1,18,320 ஆக இருந்தது.

இந்நிலையில், சென்னையில் தங்கத்தின் விலை நேற்று பவுனுக்கு ரூ.1,520 குறைந்து, ரூ.1,16,800-க்கு விற்கப்பட்டது. ஒரு கிராம் தங்கம் ரூ.190 குறைந்து ரூ.14,600 ஆக இருந்தது. 24 காரட் தங்கம் ரூ.1,27,416-க்கு விற்கப்பட்டது. அதேநேரத்தில், வெள்ளி விலையில் மாற்றமின்றி, ஒரு கிராம் வெள்ளி ரூ.300 ஆகவும், ஒரு கிலோ கட்டி வெள்ளி ரூ.3 லட்சமாகவும் இருந்தது.

தமிழகத்தில் பிப்.15-ம் தேதி

12 கோயில்களில் மகாசிவராத்திரி விழா

அறநிலையத் துறை ஏற்பாடு

■ சென்னை

இந்துசமய அறநிலையத் துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள 12 கோயில்கள் சார்பில், இந்தாண்டு மகாசிவராத்திரி விழா, ஆன்மிக சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளுடன் நாளை மறுதினம் வெகு சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.

இதுகுறித்து, இந்துசமய அறநிலையத் துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

மகாசிவராத்திரியை முன்னிட்டு, கடந்தாண்டு 9 கோயில்கள் சார்பில் சிவராத்திரி விழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. அதன்படி, மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில், திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோயில், தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில், பேரூர் பட்டீசுவரர் கோயில், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் மற்றும் திருவானைக்காவல் ஜம்புகேஸ்வரர் கோயில், திருவாரூர் தியாகராஜ சுவாமி கோயில், திருவாலங்காடு வடாரண்யேஸ்வர சுவாமி கோயில் ஆகிய 9 கோயில்களின் சார்பில் மகாசிவராத்திரி விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

> மகாசிவராத்திரி விழா ஆன்மிக சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளுடன் சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது

இந்நிலையில், 2025-26-ம் ஆண்டு சட்டப்பேரவை அறிவிப்பின்படி, இவ்வாண்டு கூடுதலாக, ராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோயில், கடலூர் மாவட்டம் விருத்தாச்சலம் விருத்தகிரீஸ்வரர் கோயில், தஞ்சாவூர் மாவட்டம், திருநாகேசுவரம் நாகநாதசுவாமி கோயில் ஆகிய 3 கோயில்கள் சார்பில், மகாசிவராத்திரி விழா நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதன்படி, ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோயில், விருத்தாச்சலம் விருத்தகிரீஸ்வரர் கோயில், திருநாகேசுவரம் நாகநாதசுவாமி கோயில் ஆகிய 3 கோயில்களுடன், ஏற்கெனவே மகாசிவராத்திரி விழா நடத்தப்பட்டுவரும் 9 கோயில்களையும் சேர்த்து மொத்தம் 12 கோயில்கள் சார்பில், நாளை மறுதினம் (15-ம் தேதி) மாலை 6 மணி முதல் 16-ம் தேதி காலை 6 மணி வரை மகாசிவராத்திரி விழா ஆன்மிக சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளுடன் சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படித்த எஸ்சி, எஸ்டி இளைஞர்களுக்கு

சூரிய ஒளி மின்சார டெக்னீஷியன் பயிற்சி

■ சென்னை

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்தின் (தாட்கோ) மேலாண் இயக்குநர் கே.எஸ்.கந்தசாமி நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பு:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் தாட்கோ நிறுவனம் பல்வேறு திறன் பயிற்சிகளை அளித்து வருகிறது. அந்த வகையில், தற்போது டாக்டர் ரெட்டி நிறுவனத்துடன் இணைந்து சூரிய ஒளி பலகை பொருத்தும் தொழில்நுட்ப வல்லுநர் பயிற்சி (Solar Panel Installation Technician Training) வழங்கப்பட உள்ளது.

இந்த பயிற்சியில் 12-ம் வகுப்பு முதல் ஏதேனும் ஒரு பட்டப் படிப்பு முடித்தவர்கள் வரை சேரலாம். வயது 18 முதல் 32-க்குள் இருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமானவரம்பு ரூ.3 லட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பயிற்சிக்காலம் 45 நாட்கள். சென்னையில் விடுதி வசதி, உணவுச் செலவினம் ஆகியவற்றை தாட்கோ ஏற்றுக்கொள்ளும். பயிற்சியை முழுமையாக முடிப்போருக்கு தேசிய திறன் மேம்பாட்டுக் கழக அங்கீகாரச் சான்றிதழ் வழங்கப்படும். மாதம் ரூ.18 ஆயிரம் முதல் ரூ.30 ஆயிரம் வரையிலான வேலைவாய்ப்பும் பெற்றுத்தரப்படும். சுயமாக தொழில் தொடங்க விரும்புவோருக்கு தாட்கோ மூலம் மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்படும். பயிற்சி பெற விரும்புவோர் தாட்கோ இணையதளத்தில் (www.tahdco.com) பதிவுசெய்ய வேண்டும்.

தாய்லாந்தில் இருந்து சென்னைக்கு கடத்தி வரப்பட்ட

பாம்பு உள்ளிட்ட 31 அரிய வகை உயிரினங்கள் பறிமுதல்

■ சென்னை

தாய்லாந்தில் இருந்து சென்னைக்கு விமானம் மூலம் கடத்தி வரப்பட்ட பாம்பு உள்ளிட்ட 31 அரிய வகை உயிரினங்களை, சென்னை விமான நிலைய சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் இருந்து, நேற்றுமுன்தினம் நள்ளிரவு சென்னை வந்த விமானத்தில் இருந்த பயணிகளை சுங்கத் துறை அதிகாரிகள் தீவிரமாகக் கண்காணித்தனர். குறிப்பாக, சுற்றுலா விசாவில் சென்றுவிட்டு உடனடியாகத் திரும்பும் பயணிகளை தீவிரமாக கண்காணித்தனர். அந்த வகையில், சென்னையைச் சேர்ந்த 30வயது இளைஞர் ஒருவரின் நடவடிக்கைகளில் சந்தேகமடைந்த அதிகாரிகள், அவரை மடக்கி விசாரித்தனர். அவர் முன்னுக்குப்பின் முரணாகப் பேசியதால், அவரது பெரிய சூட்கேஸைத் திறந்து சோதனையிட்டனர்.

அப்போது, சூட்கேஸுக்குள் உயிரினங்கள் சுவாசிப்பதற்காகச் சிறிய துளைகள் இடப்பட்டிருப்பதைக் கண்டு அதிகாரிகள் அதிர்ச்சியடைந்தனர். உள்ளே பார்த்தபோது, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அரிய வகை பாம்புகள், ஆமைகள் மற்றும் பல்லிகள் உயிருடன் ஊர்ந்து கொண்டிருந்தது தெரிந்தது. குறிப்பாக, ஆப்பிரிக்கா மற்றும் சகாரா பகுதிகளில் வசிக்கும் அபூர்வ வகை சல்கட்டா ஆமைகள் 9, தென் அமெரிக்கா மற்றும் கரீபியன் தீவுகளை சேர்ந்த அரிய வகை பல்லிகள் 4, கிழக்கு ஆஸ்திரேலியாவை சேர்ந்த ஈஸ்டர்ன் வாட்டர் டிராகன் ஒன்று, ஆப்பிரிக்காவை தாயகமாகக் கொண்ட விஷமற்ற ராயல்பைத்தான் மலைப் பாம்புகள் 12, கருப்பு நிறமும் சிவப்பு கண்களும் கொண்ட ஆப்பிரிக்க இன அல்பைனோ கார்ன் பாம்பு ஒன்று, ஆஸ்திரேலிய இனத்தை சேர்ந்த நீல நாக்கு உடும்புகள் 3, வெள்ளை நிற அரச நாகம் என்று அழைக்கப்படும் கொடிய விஷம் வாய்ந்த ஒயிட்சைட் கிங் பாம்பு ஒன்று என உலக அளவில் அழிந்து வரும் நிலையில் உள்ள 31 அரிய வகை உயிரினங்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து, அந்த இளைஞரை கைது செய்து அதிகாரிகள் நடத்திய விசாரணையில், 'ஆடம்பர பங்களாக்களில் வசிப்பவர்கள் இவற்றைச் செல்லப் பிராணிகளாக வளர்ப்பதற்கும், வாஸ்து சாஸ்திரத்தின்படி வீட்டில் வைத்தால் செல்வம் பெருகும் என்ற நம்பிக்கையிலும் பல லட்சங்கள் கொடுத்து வாங்குகின்றனர். இதற்காகவே இந்த உயிரினங்கள் கடத்தி வரப்பட்டுள்ளன' என்பது தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து, வெளிநாட்டு உயிரினங்கள் மூலம் புதிய வகை வைரஸ்கள் அல்லது நோய்க்கிருமிகள் பரவும் அபாயம் இருப்பதால், மத்திய சுகாதாரத் துறையின் ஆலோசனையின்படி, இவை அனைத்தும் வந்த விமானத்திலேயே மீண்டும் தாய்லாந்துக்குத் திருப்பி அனுப்பப்பட்டன.

இதையடுத்து, கைது செய்யப்பட்ட இளைஞர் மீது சுங்கச் சட்டம் மற்றும் வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவரை 'கடத்தல் குருவி'யாகப் பயன்படுத்தி, பின்னணியில் இருந்து இயக்கிய முக்கிய குற்றவாளியைத் தேடும் பணியில் சுங்கத்துறை மற்றும் வனத்துறை அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

கோயில் நிலத்தில் குடியிருப்பு கட்டி ரூ.2,500 கோடி மோசடி

உடந்தையாக இருந்தவர்கள் மீது நடவடிக்கை

முதல்வருக்கு பாஜக வலியுறுத்தல்

■ சென்னை

தமிழக பாஜக தலைமை செய்தித் தொடர்பாளர் நாராயணன் திருப்பதி வெளியிட்டுள்ள அறிக்கை:

சென்னை, கொரட்டூரில் கோயில் நிலத்தில் 2036 வீடுகள் கட்டி 10 ஆயிரம் பேரை ஏமாற்றி ரூ.2,500 கோடி மதிப்பில் மிகப் பெரிய மோசடி நடந்திருப்பதாக வெளியான செய்தி கடும் அதிர்ச்சியளிக்கிறது. பல ஆண்டுகளுக்குப் பிறகு நீதிமன்றம் இது கோயில் நிலம் என்றதீர்ப்பை வழங்கியுள்ளதாக கூறப்படுகிறது. தனியார் கட்டுமான நிறுவனம் திட்டமிட்ட ரீதியில் மக்களை ஏமாற்றியதாக பாதிக்கப்பட்டோர் கூறுகிறார்கள்.

கோயில் நிலம் என்பதை மறைத்து, மக்களிடம் பல்லாயிரம் கோடி ரூபாய் ஏமாற்றிய அந்நிறுவனத்தின் உரிமையாளர்களை உடனடியாக கைது செய்து விசாரிக்க வேண்டும். மேலும், நிலப்பத்திரங்களை ஆய்வு செய்யாமல் வங்கிகள் எவ்வாறு மக்களுக்கு கடன் கொடுத்தன என்பதை தொடர்புடைய வங்கிகள் விளக்குவதோடு, தவறு செய்தவர்களை கடுமையாக தண்டிக்க வேண்டும்.

இதன் பின்னணியில் யார் உள்ளனர். இந்து அறநிலையத்துறை என்ன செய்து கொண்டிருந்தது என்பதையெல்லாம் விசாரித்து, இதற்கு உடந்தையாக இருந்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டியது தமிழக அரசின் கடமை.

முதல்வர் மு.க.ஸ்டாலின் இது குறித்து வாய் திறப்பாரா? நடவடிக்கை எடுப்பாரா?

AU SMALL FINANCE BANK (A SCHEDULED COMMERCIAL BANK)

AU ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்
(ஒரு அட்டவணை வர்த்தக வங்கி)
பதிவு அலுவலகம்: 19-ஏ, துலேஸ்வர் கார்டன், அஜ்மீர் சாலை, ஜெய்பூர்-302001 (CIN:L36911RJ1996PLC011381)

இணைப்பு IV [விதி 8(1) பார்க்கவும்] சுவாதீன அறிவிப்பு

AU ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட் ஒரு அட்டவணை வர்த்தக வங்கி அதிகாரபூர்வ அதிகாரியாக கீழே கையொப்பமிட்டுள்ளவர் இருக்கிறபடியால், "நிதி சொத்துக்களின் பத்திரமயமாக்கல் மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம், 2002" மற்றும் பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகள் 2002 உடன் படிக்கப்பட்ட பிரிவு 13-ன்கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களை பயன்படுத்தி 25.11.2025 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டார் பார்வை எண். CB/SAR/13-2/BB/NOV-2025/22 கடன் கணக்கு எண்கள் 2406262058331114, கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர்கள் **M/S. SDB COMMANDOS SECURITY AND MANPOWER SERVICES அதன் உரிமையாளர் திரு.மாதவராவ் (கடன்தாரர்), திரு. மாதவராவ் த/பெ. திரு. லஷ்மணா (ஜாமீன்தாரர்/அடமானதாரர்), திருமதி, சாஸ்வதி மாதவராவ் க/பெ. திரு. மாதவராவ் (ஜாமீன்தாரர்)** ஆகியோரின் **கடன் கணக்கு எண். 2406262058331114** -க்கான தொகையை அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் **ரூ.1,03,68,747/- (ரூபாய் ஒரு கோடியே மூன்று இலட்சத்து அறுபத்தி எட்டாயிரத்து எழுநூற்றி நாற்பத்தி ஏழு மட்டும்)** நிலுவைத் தொகை மற்றும் வட்டி, கட்டணங்கள் மற்றும் முழுதொகை செலுத்தும் வரையுள்ள செலவினங்கள் சேர்த்து செலுத்துமாறு கோரியிருந்தார்.

மேற்படி பாக்கித்தொகையை கடன்தாரர்/அடமானதாரர் செலுத்த தவறிவிட்டபடியால் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்/அடமானதாரர்-களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பதாவது மேற்படி சட்டம் பிரிவு 13(4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதிகளில் விதி 8-ல் தமக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே கையொப்பமிட்டுள்ளவர், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை **10.02.2026** அன்று சுவாதீனம் செய்துள்ளார்.

"கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13 துணை பிரிவு (8) அதனுடன் கூடிய 8(6) ஷரத்துக்களின்படி அதாவது 30 நாள்கள் அறிவிப்பாக கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது."

கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர்களுக்கு குறிப்பாகவும், பொது மக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில் சுவாதீனமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமும் வைத்துக் கொள்ளக்கூடாது. மீறி வைத்துக்கொண்டால் அது AU ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-க்கு செலுத்தப்பட வேண்டிய பாக்கித்தொகை **31.01.2026** அன்றைய **ரூ.1,07,19,026/- (ரூபாய் ஒரு கோடியே ஏழு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து இருபத்தி ஆறு மட்டும்)** மற்றும் கடனுக்கான வட்டி உட்பட குறிப்பிடப்பட்ட வட்டி, தொகைகள், கட்டணங்கள், முழு தொகை செலுத்தும் வரை உள்ள செலவினங்கள் இதரவை சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும்.

அசையா சொத்துக்கள் விபரம்

குடியிருப்பு சொத்து மற்றும் அதனை சார்ந்த பகுதிகளும், பிளாட் எண். F3, முதல் தளம், அளவுகள் சூப்பர் பில்ட்-அப் ஏரியா 1219 சதுர அடி (பொது ஏரியா மற்றும் மூடப்பட்ட ஒரு கார் நிறுத்துமிடம் உட்பட) அப்பார்ட்மெண்ட் பெயர் "மாருதி பிளாட்ஸ்" (கட்டிடம் ஒப்புதல் எண். 4362/2015 மற்றும் பிளானிங் பர்மிட் எண். 4517/2015) அத்துடன் 1 கிரவுண்ட் மற்றும் 1505 சதுர அடியில் 541 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம், மனை எண். 1007, TNHB காலனி, 47வது தெரு, கொரட்டூர், சென்னைக்குட்பட்டது, சர்வே எண். 960 பகுதி, தற்போது டி.எஸ்.எண். 30, பிளாக் எண். 53, வார்டு எண். 7 (056) கொரட்டூர் (வார்டு : E) கொரட்டூர் கிராமம், அம்பத்தூர் டவுன், அம்பத்தூர் தாலுகா, சென்னை மாவட்டம் மற்றும் வில்லிவாக்கம் சார் பதிவு மாவட்டம் மற்றும் மத்திய சென்னை பதிவு மாவட்டம், தமிழ்நாட்டில் அமைந்துள்ளது. உரிமையாளர் திரு. மாதவராவ்.

எல்லைகள் பின்வருமாறு :
கிழக்கு : மனை எண். 1008, மேற்கு : ஏரி
வடக்கு : சாலை, தெற்கு : மனை எண். 1006

நாள் : 10.02.2026 Sd/-
இடம் : மத்திய சென்னை மாவட்டம், தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
AU ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

TATA — டாடா கேபிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் — கோரிக்கை அறிவிப்பு
தொடர்பு முகவரி : 11வது தளம், டவர் ஏ, பெனிஞுலா பிசினஸ் பார்க், கணபத் ராவ் கடம் மார்க், லோவர் பரேல், மும்பை-400013. தொடர்பு எண். (022) 66069383.

பாதுகாப்பு நலன் (அமலாக்கம்) விதிகள், 2002 ("விதிகள்") விதி 3 உடன் படிக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் பாதுகாப்பு நலன்களை செயல்படுத்துதல் சட்டம், 2002 ("சட்டம்") பிரிவு 13(2)-ன்கீழ்

கீழே கையொப்பமிட்டுள்ள **டாடா கேபிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (TCHFL)**-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பிரிவு 13(12) சட்டத்தின்கீழ் பிரிவு 13(2) சட்டத்தின் விதி 3-ன்கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி கீழே தேதியிட்ட விரிவான கோரிக்கை அறிவிப்பு ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. இங்கு பட்டியலிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்)/ இணை கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்(கள்)/ அடமானதாரரும் ஒருமையாக அல்லது ஒன்றாக "கடமையாளர்கள்"/"சட்டப்பூர்வ வாரிசு(கள்)/சட்டப் பிரதிநிதி(கள்) ஆகியோரை அழைத்து, குறிப்பிட்ட தொகையைச் செலுத்த அந்தந்த கோரிக்கை அறிவிப்பில், கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின்படி, அந்தந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்த மேற்கூறிய அறிவிப்புகளின் நகல்கள் பதிவு செய்யப்பட்ட அஞ்சல் A.D. மூலம் வழங்கப்பட்டன, மேலும் அவை கீழே கையொப்பமிடப்பட்டவரிடம் கிடைக்கின்றன, மேலும் கூறப்பட்ட கடன்தாரர்கள்/சட்டப்பூர்வ வாரிசு(கள்)/சட்டப் பிரதிநிதி(கள்) அவர்கள் விரும்பினால் சம்பந்தப்பட்டவைகளை சாதாரண அலுவலக நேரத்தில் எந்த வேலை நாளிலும் கீழே கையொப்பமிடப்பட்டவரிடமிருந்து நகல் சேகரிக்கலாம்.

மேற்கூறியவை தொடர்பாக TCHFL-க்கு அந்தந்த அறிவிப்பு/கள் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள், மேற்கூறிய கடமைப்பட்டவர்கள்/ சட்டப்பூர்வ வாரிசு(கள்)/சட்டப் பிரதிநிதி(கள்) ஆகியோருக்கு மீண்டும் ஒருமுறை அறிவிப்பு கொடுக்கப்படுகிறது, அந்தந்த பெயர்களுக்கு எதிராக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகை, மேலும் வட்டியுடன் சேர்த்து, கீழே (d) நெடு வரிசையில் குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் இருந்து பணம் செலுத்தும் தேதி வரை அல்லது கடன் ஒப்பந்தம் மற்றும் பிற ஆவணங்கள்/ எழுத்துகளுடன் படிக்கவும், ஏதேனும், இருந்தால் கடமைப்பட்டவர்கள் செயல்படுத்தலாம். கடனை உரிய முறையில் திருப்பிச் செலுத்துவதற்கான பத்திரமாக, பின்வரும் பாதுகாப்பான சொத்து(கள்) TCHFL-க்கு முறையே கூறப்பட்ட கடன்தாரர்(கள்) மூலம் அடமானம் வைக்கப்பட்டுள்ளன.

வ. எண்.	கடன் கணக்கு எண்	கடமைப்பட்டவர்(கள்)/ சட்ட வாரிசு(கள்)/சட்டப் பிரதிநிதி(கள்) பெயர்	கீழ்க்குறிப்பிட்ட தேதியில்* மொத்த நிலுவை தொகை (ரூ.)	கோரிக்கை அறிவிப்பு நாள் & NPA நாள்
1.	10027146	திரு. ராஜன் B, (கடன்தாரர்) திருமதி. கோமலாதேவி P, (இணை-கடன்தாரர்)	30.01.2026 தேதியில் தொகை ரூ.7,39,967/- (ரூபாய் ஏழு இலட்சத்து முப்பத்தி ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தி ஏழு மட்டும்)	30-01-2026 and 07-01-2026

பாதுகாப்பு சொத்துக்கள்/அசையா சொத்துக்கள்/அடமான சொத்துக்கள் விவரம் : கட்டிடம் சொத்து மற்றும் அதனை சார்ந்த அனைத்து பகுதிகளும், 398 சதுர அடி UDS சொத்து, நும்பல் கிராமம், சைதாப்பேட் தாலுகா, செங்கை-காஞ்இஆர் மாவட்டம், வரதராஜபுரம் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், மற்றும் தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் குன்றத்தூர் சார் பதிவு மாவட்டத்திற்குட்பட்டது பின்வருவை : நிலம் அளவுகள் 850 சதுர அடி மனை எண்.81, ஆர்.எஸ்.எண். 127/1 பகுதி மற்றும் மறுஎண் ஆர்.எஸ்.எண்கள். 127/1ப1 பகுதி, மனை எண்.81. **வடக்கில் :** ஆர்.எஸ்.எண். 127/1 பகுதிக்குட்பட்ட நிலம் மற்றும் மனை எண்.80 என்று குறிக்கப்பட்டது, **தெற்கில் :** ஆர்.எஸ்.எண். 127/1 பகுதிக்குட்பட்ட நிலம் மற்றும் மனை எண்.82 என்று குறிக்கப்பட்டது, **கிழக்கில் :** ஆர்.எஸ்.எண். 127/1 பகுதிக்குட்பட்ட நிலம் மற்றும் மனை எண்.40 என்று குறிக்கப்பட்டது, **மேற்கில் :** 24 அடி சாலை. நிலம் அளவுகள் 867 சதுர அடி மனை எண்.82, ஆர்.எஸ்.எண். 127/1 பகுதி மற்றும் மறுசர்வே ஆர்.எஸ்.எண்கள். 127/1ப1 பகுதி, மனை எண்.82, **வடக்கில் :** ஆர்.எஸ்.எண். 127/1 பகுதிக்குட்பட்ட நிலம் மற்றும் மனை எண்.81 என்று குறிக்கப்பட்டது, **தெற்கில் :** ஆர்.எஸ்.எண். 127/1 பகுதிக்குட்பட்ட நிலம் மற்றும் மனை எண்.83 என்று குறிக்கப்பட்டது, **கிழக்கில் :** ஆர்.எஸ்.எண். 128 பகுதிக்குட்பட்ட நிலம், **மேற்கில் :** 24 அடி சாலை. மற்றும் பிளாட் எண். கீ2, அளவுகள் 852 சதுர அடி, பிளாக் எண்.சி, முதல் தளம் பகுதி அமைந்த இரு/ஈடு படுக்கையறை கொண்ட "TRINETRA" என்று பெயரிடப்பட்ட திட்டத்தில் உள்ளது மற்றும் குன்றத்தூர் சார் பதிவு மாவட்டம் மற்றும் சென்னை பதிவு மாவட்டத்திற்குட்பட்டது.

4.	TCHHL0842000100241534 & TCHIN0842000100243420	திருமதி. அமுதா I (கடன்தாரர்) திரு. சரவணன் I (இணை-கடன்தாரர்)	02.02.2026 தேதியில் தொகை ரூ.13,79,994/- (ரூபாய் பதிமூன்று இலட்சத்து எழுபத்தி ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றி நான்கு மட்டும்)	02-02-2026 and 01-02-2026

பாதுகாப்பு சொத்துக்கள்/அசையா சொத்துக்கள்/அடமான சொத்துக்கள் விவரம் : காலி நிலம் மற்றும் அதனை சார்ந்த அனைத்து பகுதிகளும், காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் பதிவு மாவட்டம், காஞ்சிபுரம் இணை 2 சார் பதிவு மாவட்டம், காஞ்சிபுரம் தாலுகா, பூதேரி கிராமம், "ஸ்ரீ சாய் நகர்" பமயை ச.எண். 334/4A, புதிய ச.எண். 334/4A1A1, பட்டா எண். 1416-என்படி புதிய துணை-பிரிவு ச.எண். 334/18, மற்றும் காஞ்சிபுரம் இணை - 2 பதிவு மாவட்டம் மற்றும் காஞ்சிபுரம் சார்-பதிவு மாவட்டத்திற்குட்பட்டது. மனை எண்.27 தெற்கு பகுதி மனை எண்.27 தெற்கு பகுதி, அளவுகள் கிழக்கிலிருந்து மேற்கு 60 அடி, வடக்கிலிருந்து தெற்கு 18 அடி, மொத்தம் 1080 சதுர அடி எல்லைகள் : கிழக்கு - மனை எண்.37, மேற்கு வடக்கிலிருந்து தெற்கு 23 அடி, 2வது சாலை, வடக்கு - மனை எண்.27 வடக்கு பகுதி, தெற்கு - மனை எண்.28, மனை எண்.28 வடக்கு பகுதி மனை எண்.28 வடக்கு பகுதி, அளவுகள் கிழக்கிலிருந்து மேற்கு 60 அடி, வடக்கிலிருந்து தெற்கு 2 அடி, மொத்தம் 120 சதுர அடி. **எல்லைகள் : கிழக்கு** - மனை எண்.37, **மேற்கு** - வடக்கிலிருந்து தெற்கு 23 அடி, 2வது சாலை, **வடக்கு** - மனை எண்.27, **தெற்கு** - மனை எண்.28 தெற்கு பகுதி, சுருக்கும் :- மொத்த பரப்பு மனை எண்.27 தெற்கு பகுதி - 1080 சதுர அடி, மொத்த பரப்பு மனை எண்.28 வடக்கு பகுதி - 120 சதுர அடி அத்துடன் - 1200 சதுர அடி, இதன் அனைத்து அளவுகள் 1200 சதுர அடி.

7.	100059514	திரு. சிலம்பரசன் D, (கடன்தாரர்) திருமதி. கண்ணம்மாள் S & M/s. Thanjjaiamman Transport (இணை-கடன்தாரர்கள்)	06.02.2026 தேதியில் தொகை ரூ.30,87,120/- (ரூபாய் முப்பது இலட்சத்து எண்பத்தி ஏழாயிரத்து நூற்றி இருபது மட்டும்)	06-02-2026 and 03 -02-2026